**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, FAST TRACK COURT, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 299/2019 P.W. 7/L.W.5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திருமதி. தங்க லீலா | **Taluk** | : | |
| **Father's Name** | : | த/பெ.வில்லியம் | **Age** | : | |
| **Address** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 19.05.2025.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜரில்லை. மேற்படி ஆஜரின்மை நீதியின் நலன் கருதி கு.வி.மு.ச 1973 பிரிவு 317(1)ன் கீழ் அனுமதிக்கப்படுகிறது. குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து காய்கறி வியாபாரம் செய்து வருகிறேன். குற்றம் சுமத்தப்பட்ட நபரை எனக்குத் தெரியும். அ.சா.1 எனது தம்பியின் மனைவி ஆவார். சுமார் 12 வருடங்களுக்கு முன்பு எனது தம்பியின் மனைவி சோபியா அ.சா.1ன் வீட்டில் குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஒன்றரை பவுண் எடையுள்ள கோவிகண்ணி செயினை அறுத்துக் கொண்டு சென்றதாக அ.சா.1 கூறினார். அதன்பிறகு மண்டைக்காடு காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் போட்டேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் நகை கிடைத்ததற்காக நான் போட்டேன். வேறு எதுவும் எனக்குத் தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சி அரசுத்தரப்பு சங்கதிகளிலிருந்து முற்றிலும் மாறுப்பட்ட சங்கதியை இந்நீதிமன்றத்தில் சாட்சியமளித்திருப்பதால் மேற்படி தனது தரப்பு சாட்சியை நீதியின் நலன் கருதி குறுக்குவிசாரணை செய்ய கேட்கிறார். இந்நீதிமன்றம் வழக்கின் தன்மை கருதி இந்திய சாட்சிய சட்டம் 1872 பிரிவு 154—ன் கீழ் அனுமதிக்கிறது.**

**அரசுத்தரப்பு குறுக்கு விசாரணை**

1. கடந்த 09.03.2013ம் தேதி 15.00 மணி அளவில் நானும் என்னுடன் பொன்மணிராஜ் என்பவரும் சேர்ந்து எங்கள் சொந்தக்காரரான அ.சா.1 சோபியாவை ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவமனை சென்று பார்த்துவிட்டு வரும்போது

மண்டைக்காடு காவல்நிலைய ஆய்வாளர் தங்கள் மண்டைக்காடு காவல்நிலையத்தில் இவ்வழக்கு சம்மந்தமாக குற்றம் சுமத்தப்பட்ட நபர் வேல்முருகன் என்பவரை பிடித்து எங்கள் முன்பு வைத்து விசாரிக்கையில் அவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் ஆஜர் சாட்சிகளாக எங்கள் முன் வைத்து பதிவு செய்தார்கள் என்றும், மேலும் ஒப்புதல் வாக்குமூலத்தில் கூறியபடி அவரை இராஜாக்கமங்கலம் பைனாஸ்க்கு சென்று அங்கு வேல்முருகன் ஆஜர் செய்த சுமார் 09.700 கிராம் எடையுள்ள தங்கச் செயின் எங்கள் முன்னிலையில் அத்தாட்சியின் மூலம் கைப்பற்றினார்கள் என்றும் அந்த அத்தாட்சி மற்றும் ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் பொன்மணிராஜ்–யும் கையொப்பம் செய்து விட்டு தற்சமயம் வழக்கின் உண்மை நிலையை மறைத்து எனக்கே தெரிந்த காரணத்திற்காக உண்மை சங்கதியை மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை</u>**

குறுக்கு விசாரணை இல்லை.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,
இரணியல்.